செ.வெ.எண்: 45 நாள்:23.03.2021

**கரூர் மாவட்டம்**

**கரூர் மாவட்டத்தில் உள்ள 4 சட்டமன்ற தொகுதிகளுக்கான வாக்கு எண்ணும் மையத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் முன்னேற்பாட்டுப் பணிகள் குறித்து மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவருமான திருமதி சு.மலர்விழி,இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்**

அதன் விபரம் வருமாறு:

நடைபெறவுள்ள தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கான பொதுத்தேர்தலில் கரூர் மாவட்டத்தில் உள்ள 4 சட்டமன்றத்தொகுதிகளின் வாக்கு எண்ணும் மையமான தளவாபாளையம் எம்.குமாரசாமி பொறியியல் கல்லூரியில் மாவட்ட தேர்தல் அலுவலா் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவருமான திருமதி சு.மலா்விழி,இ.ஆ.ப., அவர்கள் இன்று (23.03.2021) பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

தமிழகத்திற்கான சட்டமன்றப்பேரவை பொதுத்தேர்தலை நடத்துவதற்கு 26.02.2021 அன்று இந்திய தேர்தல் ஆணையத்தால் அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதனடிப்படையில், கரூர் மாவட்டத்தில் உள்ள 4 சட்டமன்ற தொகுதிகளுக்கும் 12.03.2021 அன்று முதல் 19.03.2021 வரை மொத்தம் 211 வேட்பு மனுக்கள் பெறப்பட்டது. 20.03.2021 அன்று வேட்பு மனுக்கள் பரிசீலனை செய்யப்பட்டு 40 மனுக்கள் நிராகரிக்கப்பட்டு 171 மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டது. 22.03.2021 அன்று வேட்பு மனு திரும்பப்பெறும் நாளாக அறிவிக்கப்பட்டிருந்தது.

இறுதியில், 134-அரவக்குறிச்சி சட்டமன்ற தொகுதியில் 40 வேட்பாளர்களும், 135-கரூர் சட்டமன்ற தொகுதியில் 77 வேட்பாளர்களும், 136-கிருஷ்ணராயபுரம் (தனி) சட்டமன்ற தொகுதியில் 26 வேட்பாளர்களும், 137-குளித்தலை சட்டமன்ற தொகுதியில் 18 வேட்பாளர்களும் என மொத்தம் 161 வேட்பாளர்கள் இறுதி வேட்பாளர்களாக அறிவிக்கப்பட்டுள்ளது.

22.03.2021 அன்று இறுதிசெய்யப்பட்ட வேட்பாளர்களுக்கான சின்னம் ஒதுக்கப்பட்டுள்ளது. இறுதி வேட்பாளர்களின் எண்ணிக்கையின்படி மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன்படி, வருகின்ற 06.04.2021 அன்று வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது. பின்னர், 02.05.2021 அன்று வாக்கு எண்ணிக்கை நடைபெறவுள்ளது.

வாக்கு எண்ணும் மையமான தளவாபாளையம் எம்.குமாரசாமி பொறியியல் கல்லூரியில் 134-அரவக்குறிச்சி, 135-கரூர், 136-கிருஷ்ணராயபுரம் (தனி), 137-குளித்தலை ஆகிய சட்டமன்றத்தொகுதிகளுக்கு தொகுதிவாரியாக வாக்கு எண்ணும் மையத்தில் முதல் தளம், இரண்டாம் தளம் மற்றும் மூன்றாம் தளங்களில் வாக்கு எண்ணும் அறைகள் அமைக்கப்பட்டுள்ளது.

வாக்குப்பதிவு முடிந்தபிறகு மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் வாக்குப்பதிவு தணிக்கை இயந்திரங்களை பாதுகாப்பாக வைப்பதற்கான அறைகளில் (STRONG ROOM) மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்து மாவட்ட தேர்தல் அலுவலர் அவர்கள் விரிவாக ஆய்வு செய்தார். மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள், மின்னணு வாக்குபதிவு தணிக்கை இயந்திரம், கட்டுப்பாட்டு கருவி ஆகியவற்றை பாதுகாப்பு அறையில் வைப்பதற்கு போதிய இடவசதி இருக்கும் வகையில் பாதுகாப்பு அறைகளில் நிலஅளவை பிரிவினா் மற்றும் பொதுபணித்துறையினா் மூலம் குறியிடும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதை பார்வையிட்டு ஆய்வு செய்த மாவட்ட தேர்தல் அலுவலர் அவர்கள், இறுதி வேட்பாளர் பட்டியலின்படி ஒவ்வொரு தொகுதியிலும் போட்டியிடும் வேட்பாளர்களின் எண்ணிக்கையினைப் பொறுத்து பயன்படுத்தக்கூடிய

மின்னனு வாக்குப்பதிவு இயந்திரங்களின் எண்ணிக்கை அமையும், எனவே, அதற்கேற்றாற்போல தொகுதிவாரிகயான மின்னனு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் வாக்குப்பதிவு தணிக்கை இயந்திரங்களை வைக்கும் வகையில் குறியீடுகளை இட வேண்டும் என்று துறை அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

மேலும், வாக்குப்பதிவு முடிந்து அனைத்து வாக்குச்சாவடி மையங்களில் இருந்தும் கொண்டுவரப்படும் மின்னணுவாக்குப்பதிவு இயந்திரங்களை பெற்றுக்கொள்வதற்கான இடம் குறித்தும், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை கொண்டு வரும் வாகனங்களுக்கு தொகுதி வாரியாக தனித்தனியே வழிகள் அமைத்து போக்குவரத்து இடையூர் ஏற்படாத வகையில் வாகனங்கள் எந்த வழியே வந்து எந்த வழியே வெளியே செல்ல வேண்டும் என்பது குறித்த போக்குவரத்து மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் பற்றி விரிவாக ஆய்வு செய்தார்.

மேலும், வாக்குப்பதிவு முடிந்த 06.04.2021 நாள் முதல் வாக்கு எண்ணிக்கை நாளான 02.05.2021 வரை உள்ள நாட்களில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைத்துள்ள பாதுகாப்பு அறையை சிசிடிவி கேமராக்கள் மூலம் அலுவலர்கள் மற்றும் முகவர்கள் அமர்ந்து கண்காணிக்கும் அறை அமைக்கவும், தேர்தல் பார்வையாளர்கள் மற்றும் அலுவலர்கள் வந்து செல்வதற்காகவும், அரசியல் கட்சிகளின் முகவர்கள் வந்து செல்வதற்காகவும் தனித்தனியே வழிகள் அமைக்கவும், அவர்களுக்கு தேவையான குடிநீர், கழிப்பறை வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவும், வாக்கு எண்ணிக்கையினை முழுமையாக கண்காணிக்கும் வகையில் சிசிடிவி கேமராக்கள் அமைக்கவும் அலுவலர்களுக்கு மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஆலோசனை வழங்கினார்.

இந்நிகழ்வின்போது, மாவட்ட வருவாய் அலுவலர் திரு.எம்.லியாகத், கரூர் சட்டமன்றத் தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் திரு.என்.எஸ்.பாலசுப்பிரமணியன், ஊரக வளர்ச்சி முகமை செயற்பொறியாளர் திரு.பாலகிருஷ்ணன், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் திரு.சச்சிதானந்தம், உள்ளிட்ட அலுவலர்கள் இருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.**